உ

மகாமகோபாத்யாய, தாக்ஷிணாத்ய கலாநிதி திராவிட வித்யாபூஷணம்

டாக்டர் - உ. வே. சாமிநாதையர் D.Litt.

அவர்களின்

வாழ்க்கையும், செயற்கரிய செயலும், அவர்கள் நினைவு நூல்நிலைய வரலாறும்

(நிறுவியது : 5-7-1943)

விலை 40 பைசா

நூல்நிலைய ஆட்சிக் குழுவினர்

1. ஸ்ரீமதி ருக்மிணிதேவி, அத்யக்ஷகர்.
2. ஸ்ரீ N. கோபாலய்யர், நிதியாளர்.
3. ஸ்ரீ K. சங்கர மேனன்.
4. ஸ்ரீ S. சச்சிதானந்தம் பிள்ளை.
5. ஸ்ரீ கி. வா. ஜகந்நாதையர்.
6. ஸ்ரீ க. சுப்பிரமணிய ஐயர்
7. ஸ்ரீ R. விசுவநாதையர், அமைச்சர்.

மகாமகோபாத்யாய

தாக்ஷிணாத்ய கலாநிதி, திராவிட வித்யாபூஷணம்

டாக்டர்

உ. வே. சாமிநாதையர் D.LITT.

அவர்களின்

(1855-1942)

வாழ்க்கையும் செயற்கரிய செயலும் அவர்கள் நினைவு நூல்நிலையமும்

தமிழ் வரலாற்றில் எதிர்பாராத சில இறக்கங்களும் ஏற்றங்களும் ஏற்பட்டுள்ளன என்பதை அறிகிறோம். உதாரணமாக, ஏறக்குறைய சங்க காலத்தை அடுத்த ஒரு நூற்றாண்டிலே, பாண்டிநாட்டிலே, கொடிய பஞ்சமொன்றுண்டாக அப்பொழுது அந்நாட்டை ஆண்டுவந்த அரசன் கவன்று, தன் அவையிலிருந்த சான்றோர்கள் துன்புறாமலிருக்கும்பொருட்டு அவர்களை வேறிடங்களுக்கு அனுப்பி வைத்தான். இது நிகழ்ந்த பல ஆண்டுகளுக்குப் பின், நாட்டில் பஞ்சம் ஒருவாறு நீங்க, அப்போது, இறந்தவர் போக எஞ்சிய சான்றோர்கள் பலர் தம் மன்னனை நாடித் திரும்பி அவனிடம் வந்தனர். ஆனால் அவர்களுள், பொருளிலக்கணம் வல்லவர் எவரும் இல்லாமற்போகவே பாண்டியன் மிகவும் வருந்தி, நாட்டின் கல்வியறிவுக்கு வந்த குறையை ஆலவாய்க் கடவுளிடம் கூறி முறையிட, அவர் அருள்கூர்ந்து, அகப்பொருளிலக்கண நூலொன்றைத் தாமே யாத்து அருளினர். அவ்வரலாற்றை விளக்க அந்நூல் 'இறையனார் அகப்பொருள்' என்ற பெயருடன் வழங்கலாயிற்று; அந்நூலுக்கு உரை காணவும் அவரே உதவியருளினாரென்றும் கூறுவர்.

மேலே குறித்த நிகழ்ச்சிக்கு ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின், சோழ நாட்டரசனான இராசராச

அபய குலசேகரன் என்பவன், மூவர் முதலிகள் அருளிய தேவாரப் பதிகங்களுள் மிகச் சிலவே உலகில் எஞ்சி நிற்க, மற்றவை எல்லாம் மறைந்து போயினமை கண்டு. மிகவும் கவலையுற்ருன். அப்போது, விநாயகப் பெருமானின் திருவருளால், நம்பியாண்டார் நம்பி என்ற ஒரு சான்றவர் தேவாரத் திருப்பதிகங்கள் தில்லையில் மண்ணினுள் புதைந்து கிடந்ததை அறிந்து, அவற்றுள் மண் தின்றவை போக எஞ்சியவற்றை எடுத்து மன்னனுக்கு அளித்தனர். அவன் அவரைக் கொண்டு அவற்றை ஏழு திருமுறைகளாக முறைப்படுத்தி உலகுக்கு அளித்தனன் என்று கூறுவர்.

மேலே குறித்த நிகழ்ச்சிகளைப்போன்ற ஒரு நிலை தமிழ் இலக்கிய வரலாற்றில், கடந்த நூற்ருண்டில் உளதாயிற்று. பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற சங்க நூல்களும், சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற பேரிலக்கியங்களும், அவற்றின் சிறப்புமிக்க உரைகளும், அக்காலத்துத் தமிழ்ச் சான்ருேர்களுக்குக் கிடைப்பது அரிதாகி, அவற்றின் பெயர்கள்கூட அவர்களின் அறிவுக்கு எட்டாமல் மறைந்து போயின. அவற்றின் இழப்பால் தமிழகத்தின் மிகப் பழைய பண்பாடு எத்தகையதென்றறிய வாயிலில்லாமல் போயிற்று. அந்நூல்களைக் கொண்ட சுவடிகள் நீர், நெருப்பு, பூச்சி முதலியவற்றிற்கு இரையாகிக் கழிந்தன போக, எஞ்சிய சிலவும் படிப்பாரில்லாமல், தம் உருக்கெட்டு, புலவர்களின் இல்லங்களின் மச்சுக்களுள் புழுதியோடு புழுதியாய்ப் புதையுண்டு கிடந்தன. இவ்வாறு உலகினின்று முற்றிலும் மறைந்துபோன இவற்றைத் தேடிக் கண்டுபிடித்து, உருத்தெரியாமல்போன அவற்றின் பண்டை உருவைக் கண்டறிந்து, மாசுகளை நீக்கிச் செப்பனிட்டு, இக்காலத்துக்கு ஏற்றபடி சிறந்த முறையில் அச்சுப் பதிப்புக்களாக உலகுக்கு அருளிய பெருமை நம் வரலாற்றுத் தலைவர் மகாமகோபாத்யாய ஐயரவர்களைச் சார்ந்ததாகும். எனவே, இறையனுர், நம்பியாண்டார் நம்பி என்ற மாபெரும் சான்ருேர்களின் வரிசையில் இப்பெரியாரையும் கூட்டுவது சாலப்பொருத்த முடையதாகும்.

தோற்றமும் வளர்ச்சியும்

சோழநாட்டில், பாபநாசம் என்னும் நகருக்கருகில் உத்தமதானபுரம் என்ற பெயரைப் பெற்ற கிராமத்தில் வாழ்ந்து வந்த பழமையான அந்தணர் குடிகளொன்றில் 19-2-1855 இல் நம் வரலாற்றுசிரியர் அவதரித்தார். அவர் தந்தையார் வடமொழி, தென்மொழி என்ற இரு மொழிகளிலுமுள்ள இதிகாசங்கள், புராணங்கள் இவற்றில் சிறந்த தேர்ச்சியையும், பரம்பரையாகத் தம் குடும்பத்துக்குரியதாயிருந்த இசைக்கலைப் புலமையையும் பெற்றுச் சிவபக்தியிற் சிறந்தவராயும் விளங்கினர். அவருடைய திருக்குமாரராக அவதரித்த நம் ஐயருக்கு, தாம் தோன்றிய குடும்பத்தின் பண்பாடுகள் இயற்கையாகவே அமைந்திருந்தாலும், தமிழன்னையின் அருளாலே, தமிழறிவு பெறுதலிலேயே மிகுந்த நாட்டமுண்டாயிற்று. தமிழகத்தின் அதிருஷ்டம் காரணமாக அவர் திருத்தந்தையார், மகனுரின் விருப்பப்படி அவருக்குத் தமிழ்க் கல்வி அளிப்பதிலே தக்க உதவி புரிந்து வந்தார்.

அக்காலத்தில் திருவாவடுதுறை ஆதீனவித்துவானுக மகாவித்துவான் ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரம் பிள்ளை என்ற கவிஞர் பெருமான் ஒருவர் விளங்கிவந்தார். அவரை விஞ்சிய புலமை பெற்ற கவிஞர் அக்காலத்தில் தமிழகத்தில் பிறர் எவரும் இலர் என்னுமாறு அவர் அறிவாற்றல்கொண்டுவிளங்கினர். அவரால் 22 தலபுராணங்கள், 51 பிரபந்தங்கள், கணக்கற்ற தனிப்பாடல்கள் முதலியன இயற்றப்பெற்றன. அத்தகைய பெரியாரிடம் தமிழ்க் கல்வி கற்குமாறு 1871 ஆம் ஆண்டு நம் ஐயரை அவர்தம் தந்தையார் ஒப்படைத்தார் அவரும் மகாவித்துவானின் நிழல்போல அவரிடம் ஆருண்டுகள் உடனிருந்து, தமிழ்க் கல்விப் புலமையும், செய்யுளியற்றும் ஆற்றலும், மிக நன்ருக அமையப்பெற்று, அக்காலத்தில் தமிழகத்தில் சிறந்து விளங்கிவந்த பல நல்லோர்களின் அன்புக்கும் நட்புக்கும் உரியவராகியும் விளங்கலாயினர். 1876 ஆம் ஆண்டில் மகாவித்துவான் அவர்கள் இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

சாதனைகள்

1880 ஆம் ஆண்டில், ஐயரவர்கள் இருபத்தைந்து பிராயமுள்ளவராக இருந்தபோது, கும்பகோணம் அரசியலார் கல்லூரியில் தமிழாசிரியர் பதவி அவருக்குக் கிடைத்தது. அவருடைய புலமையின் செறிவும் விரிவும், மாணவர்களுக்கு நூல்களைப் போதிக்கும் ஆற்றலின் பெருமையும் அவருக்குத் தமிழுலகில் சிறந்த புகழை மேன்மேலும் ஆக்கிக் கொடுத்தன. அவ்வாறிருந்தும், தமிழன்னையின் தனி அருள், புதிய வழியொன்றில் ஐயரைப் புகுத்தி, அவர் முயற்சியின் பயனாகத் தனக்கும் தமிழுலகுக்கும், என்றும் அழியாத நன்மையைப் பயப்பித்த வரலாற்றை இனிக் காண்போம்.

ஆராய்ச்சி விதை ஊன்றப்பெற்ற வரலாறு

திரு. ஐயரவர்கள் கும்பகோணம் அரசினர் கல்லூரியில் ஆசிரியர் பதவி ஏற்ற சில மாதங்களுள், அந்நகரில் ஜில்லா முனிசீபாகப் பணியாற்றி வந்த சேலம் உயர்திரு. இராமசாமி முதலியார் என்ற அறிஞர், ஐயரவர்களுடன் ஒரு நாள் அளவளாவ நேர்ந்தபோது, அவருடைய அறிவின் ஆழத்தை அறிய விரும்பி, அவர் படித்த நூல்களின் பெயர்களைக் கேட்டறியலானார். தாம் படித்தனவான கணக்கற்ற புராணங்கள், பிரபந்தங்கள், இலக்கண நூல்கள் முதலியவற்றின் பெயர்களை ஐயர் கூறவும், அவர் மகிழ்ச்சியடையாமல், 'இவற்றிற்கெல்லாம் மூலமான நூல்களைப் படித்திருக்கிறீரா ?' என்று வினவித் தம்மிடமிருந்த சீவகசிந்தாமணி என்ற காவியத்தையும், அதற்கு நச்சினார்க்கினியர் என்ற பேரறிஞர் இயற்றிய உரையையும் கொண்ட சுவடி ஒன்றினை ஐயரிடம் அளித்து, "இதனைப் படித்து எனக்குப் பாடம் சொல்வீரானால், உமக்கும் நல்லது; எனக்கும் இன்பமுண்டாகும்" என்று கூறினார். இந்த உரையாடலும் சிந்தாமணிப் பிரதியின் நல்லளிப்பும் திரு. ஐயரவர்களின் வாழ்க்கையில் சிறந்த திருப்பத்தைச் செய்தளித்தன.

அச்சுவடியைப் பெற்றுக்கொண்ட ஐயர், அதனைப் புரட்டிப் படித்துப் பார்த்தபோது, அதன் போக்கும் மதிப்பும்,

தாம் அதுவரையில் படித்த நூல்களினின்று முற்றிலும் மாறியுள்ளமையைக் கண்டு வியந்து, அந்நூலின் வேறு பிரதிகளை நாடிப் பெற்று, அவற்ருல் நூலிலும் உரையிலும் தூய பாடங்களைக் காணவேண்டுமென்று தீர்மானித்து அவ்வாறே செய்ய முயன்ருர். சில பிரதிகள் அவருக்குக் கிடைக்கலாயின. அவற்ரேடு அவருக்கு, உருவம் விளங்காத வேறு சில பழைய நூல்களுக்குரிய ஏடுகளும் கிடைக்கலாயின. அவற்றைப் படிக்கத் தொடங்கினபோது அவர் உள்ளத்தில் தோன்றிய கருத்துக்களை அவருடைய சொற்களிலேயே காண்போம் :

புதையலின் முதற் காட்சி

"சீவகசிந்தாமணியை மாத்திரம் படித்து ஆராய்வதனுல் அந்த நூலைப் பதிப்பிக்க இயலாதென்றும், மற்றப் பழைய நூல்களையும் படித்துத் தெரிந்துகொண்டால்தான் சிந்தாமணியின் பொருள் விளக்கமாகுமென்றும் நான் உணர்ந்தேன். சிந்தாமணி உரையில் காணப்பட்ட மேற்கோள்களைத் தனியே எழுதி வைத்துக்கொண்டு திருப்பித்திருப்பிப் பார்த்து வருவேன். அதனுல் அவை மனப்பாடமாகவே இருந்தன. அவற்றிற் சில எனக்குக் கிடைத்த வேறு சில பழைய ஏடுகளில் காணப்பட்டன. அவற்றைக் கண்டபோது பெரிய புதையல் கிடைத்தது போன்ற சந்தோஷம் எனக்கு உண்டாயிற்று. மேலும் மேலும் அவ்வேடுகளைப் படிக்கத் தொடங்கினேன்.

"படித்தால் எளிதில் விளங்கக்கூடிய நூல்களாக அவை தோற்றவில்லை. அவற்றிலுள்ளது வேறு ஒரு தனி பாஷை போலவே இருந்தது. ஆனுலும் நான் விடவில்லை. படித்துப் பார்த்தேன். தொல்காப்பிய உரைகளில் வரும் பல செய்யுட்கள் அவற்றில் இருந்தன. 'இந்த நூல் தொகுதியே ஒரு தனிப் பிரபஞ்சம்' என்ற எண்ணம் எனக்கு வரவர வலிமையடைந்தது.

"அகநானூற்றைப் படித்து அதிலுள்ள செய்யுட்களுக்கு இலக்கமிட்டு அவற்றிலுள்ள அரும்பதங்களையும் தொடர்களையும் தொகுத்து அகராதி வரிசையில் எழுதி வைத்துக் கொண்டேன். நச்சினுர்க்கினியர் எங்கெங்கே, 'என்ருர்

பிறரும்' என்று எழுதுகின்றாரோ, அத்தகைய மேற்கோள் பகுதியிலுள்ள பதங்களையும் தொடர்களையும் அந்த அகராதியில் பார்ப்பேன். ஒன்று இரண்டு கிடைக்கும். அந்தப் பாட்டை எடுத்துப் பார்ப்பேன். சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதியிருக்கும் உரையால் அந்தச் செய்யுள் ஒருவாறு விளங்கும். அதிலே ஈடுபட்டு ஒருமுறை, இரண்டு முறை, மூன்றுமுறை படித்துப் பார்ப்பேன். சங்க நூல்களாகிய உலகத்தின் காட்சிகள் பனி மூடிய மலைபோல் என் கண்ணுக்குத் தோற்றலாயின. பனிப்படலம் படர்ந்திருந்தாலும் மலையினுடைய உயரமும் பருமையும் கண்ணுக்குப் புலப்படுதல்போல, தெளிவாக விளங்காவிட்டாலும் அந்தச் சங்கநூற் செய்யுட்கள் பொருளமைதியால் நிலத்தினும் பெரியனவாகவும், கடல் நீரினும் ஆழமுடையனவாகவும் தோன்றின.''

ஆராய்ச்சியும் பதிப்புக்களும்

1880இல் தொடங்கிய சிந்தாமணி ஆராய்ச்சி வேலை 1887இல் முடிவடைந்து, அவ்வாண்டு அக்டோபர் மாதத்தில் அதன் அச்சுப்பதிப்புக் கும்பகோணத்திலிருந்து முதலில் வெளியாயிற்று. அதன் உரையால் தெரியவந்த பல பழைய நூல்களையும் நல்ல வடிவில் காணவேண்டுமென்ற அவா உண்டாகவே, ஐயரவர்கள் சமயம் நேர்ந்தபோதெல்லாம் அவற்றைத் தேடுவதிலேயே செலவிடலானார் இவ்வகையில் நேரும் எந்தத் தொல்லையையும் அவர் பொருட்படுத்தவில்லை. தமிழன்னையின் அருளால் அவருடைய முயற்சிகளுக்குப் பயன்களும் கிடைத்து வந்தன. இவ்வேலை அவர்களின் ஆயுள்முழுமையும் தொடர்ந்துவந்தது. ஏறக்குறைய 1000 சுவடிகள் அவர்களால் சேர்க்கப்பெற்றன. அவற்றை ஆராய்வதும், அவற்றைக்கொண்டு பண்டை நூல்களின் தூய வடிவங்களைக் காண்பதும், அவற்றைப் படிப்பவர்க்குப் பயன்படுமாறு அந்நூல்களை உரை, ஆராய்ச்சிக் குறிப்பு முதலிய உதவிகளுடன் அச்சிற் பதிப்பித்து வெளியிடுவதும் ஆகியவை எளிய காரியங்களாக இருக்கவில்லை. அவற்றைப் பற்றி அவரே கூறுவதைக் காண்போம் :

"ஏடுகளில் இது கொம்பு, இது சுழி என்று வேறு பிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளியே யிராது. ரகாரத்துக்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சரபம் சாபமாகத் தோற்றும்; சாபம் சரபமாகத் தோற்றும். ஓரிடத்தில் சாடு என்று வந்திருந்ததை நான் சரடு என்றே பலகாலம் எண்ணியிருந்தேன் ....

"இப்படித் தடுமாறித் தடுமாறிச் சிரமப்படுவதில் எனக்கு அலுப்புத் தோன்றவில்லே. மேலும் மேலும் உத்ஸாகமே உண்டாயிற்று. ஏதேனும் ஒரு மேற்கோளோ, ஒரு விஷயமோ, ஒரு பாடமோ தெரியாமல் மயங்கித்தவித்து நின்று பிறகு விளங்கினுல், அதற்கு முன்பு பட்ட சிரமங்க ளெல்லாம் மறந்துபோகும் ; பின்னும் பதின்மடங்கு ஊக்கம் பிறக்கும்.

"இடையின ரகரத்துக்கும் வல்லின றகரத்துக்கும் பேதந்தெரியாமல் தடுக்கி நின்ற இடங்கள் பல. உரை இது, மூலம் இது, மேற்கோள் இது என்ற வேறுபாடு தெரியாமல் முட்டுப்பட்ட சந்தர்ப்பங்கள் பல. நச்சினுர்க்கினியருடைய அன்வயத்திலே வரும் பாடற் பகுதிகளைத் தேடிக் கண்டு பிடிக்க முடியாமல் மயங்கிய சமயங்கள் பல. ஓர் ஏட்டிற்கும் மற்ருேர் ஏட்டுக்கும் இடையே உள்ள பாடபேதங்களால் அடைந்த கலக்கத்திலிருந்து மீள வழியின்றி மயங்கிய நிகழ்ச்சிகள் பல. உரைக்கு மூலமும் மூலத்துக்கு உரையும் கிடைக்காமல் பலமுறை இடர்ப்பட்டேன் மேற்கோள் எதற்காக உரையாசிரியர் காட்டுகிருரென்பது விளங்காமல் பல தடவை தயங்கினேன். ஜைன விஷயங்களில் நுணுக்க மான சில செய்திகள் விளங்காமையால் மேலே வாசிக்க முடியாமல் பல காலம் தடுமாறி நின்றேன். இலக்கணச் செய்திகளை அமைத்துக்கொள்ள வகைதெரியாமல் பலவாறு யோசித்து யோசித்துப் பல சமயங்களில் குழம்பினேன்."

இவ்வளவையும் சமாளித்துக்கொண்டு தாம் எடுத்துக் கொண்ட முயற்சியைக் கைவிடாமல் இறைவன்மீது சுமை யைச் சார்த்தி, சலிப்பின்றிப் பல ஆண்டுகள் உழைத்துத் தாம் தொடங்கிய செயல்களில் எல்லாம் அவர் வெற்றி கண்டார். அவர் உள்ளம் பூரித்தது. அவருடைய சலியாத

உழைப்பால், மறைந்துபோன நூல்கள் பல ஒவ்வொன்ருக வெளிவரலாயின.

1887இல்	சீவக சிந்தாமணி	1903இல்	ஐங்குறுநூறு
1889 ,,	பத்துப்பாட்டு	1904 ,,	பதிற்றுப்பத்து
1892 ,,	சிலப்பதிகாரம்	1918 ,,	பரிபாடல்
1894 ,,	புறநானூறு	1924 ,,	பெருங்கதை
1898 ,,	மணிமேகலே	1937 ,,	குறுந்தொகை

என்றபடி, தமிழன்னேக்குரிய பழம்பெரும் அணிகலங்களுட் பல, புத்துருப்பெற்றுப் புது மெருகுடன் வெளிவந்தன. இவற்ருேடு, அவர்கள் வெளியிட்ட அரிய நூல்கள்:—தல புராணங்கள் 14, இலக்கண நூல்கள் 4, கோவைகள் 5, உலாக்கள் 9, தூதுகள் 6, குறவஞ்சி 1, கலம்பகம் 1, பரணிகள் 2 ஆகத் தனிப் பிரபந்த நூல்கள் 24; பெரிய பிரபந்தத் திரட்டுக்கள் 3; விருத்தம், வெண்பா, மாலே, அந்தாதி, இரட்டைமணிமாலே, மும்மணிக்கோவை, பஞ்ச ரத்தினம் என்ற பெயர்களேக் கொண்ட நூல்கள் 16, ஆக 61 அரிய நூல்கள் அவர்களுடைய திருக்கரங்களி னின்று வெளிவந்துள்ளன.

இவற்றையன்றி, தமக்கே உரிய தனிச்சிறப்பு வாய்ந்த உயிர் ததும்பும் உரைநடை நூல்கள் இருபத்தொன்றினே யும் அவர்கள் எழுதி வெளியிட்டிருக்கிருர்கள். அவற்றுள், மகாவித்துவான் பிள்ளே அவர்களுடைய சரித்திரமும், என் சரித்திரம் என்ற தம் சுயவரலாறும் மிகச் சிறப்பு வாய்ந் தவை. பிறவும், இருபதாம் நூற்ருண்டில் தமிழகப் பண்பாட்டை விளக்குவனவாய் அமைந்துள்ளவை.

இவ்வாறு, நம் ஐயரவர்கள், தம் ஆசிரியரைப்போலவும் அதற்கு ஒருபடி மேலும் ஒப்பற்ற முறையில் தமிழ்ப் பெரும் பணிகளே இயற்றித் தமிழன்னேயின் பூரண ஆசிக்கு உரியர் ஆகி விளங்கினுர்கள். அவருடைய அருமை பெருமைகள் நாளடைவில் உலகத்தாராலும் ஓரளவு உணரப்பெற்றன.

1906இல் அரசாங்கத்தார் அவருக்கு 'மகாமகோபாத்யாய' என்ற பட்டத்தையும்,

1917இல் காசி, பாரததர்ம மண்டலத்தார், 'திராவிட வித்யா பூஷணம்' என்ற விருதையும்,

1925இல் காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீசங்கரா சார்யஸ்வாமிகள் 'தாக்ஷிணாத்ய கலாநிதி' என்ற புகழின் அறிகுறியையும்,

1932இல் சென்னைப் பல்கலைக் கழகத்தார், 'டாக்டர் ஆப் லிட்டரேச்சர்' என்ற சிறப்பையும் அளித்துக் கௌரவித்தார்கள்.

இவ்வாறு தாம் தோன்றிய நாட்டுக்கும் அந்நாட்டு மொழிக்கும் செய்யவேண்டிய அரும் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்து முடித்து, ஐயரவர்கள் தமிழன்னையின் பரிபூரண அருளைப் பெற்று 1942 ஏப்ரல் 28உ பக்ஷிதீர்த்தம் எனப்படும் திருக்கழுக்குன்றத் தலத்தில் வேதகிரீசர் திருவடியைச் சார்ந்தார்கள். இது நிகழ்ந்து ஆறு ஆண்டுகட்குப்பின், தமிழன்பர்கள் தங்கள் நன்றியைத் தெரிவிக்க, சென்னையில் தக்க ஓரிடத்தில் அவர்களுடைய உருவச் சிலையை (6-3-1948 அன்று) நிறுவி, வருங்கால மக்களுக்கு அப்பெரியாருடைய நினைவின் குறியாக என்றும் நிலைபெறச் செய்தனர். இவை நிற்க :

நூல் நிலையம்

ஐயரவர்களின் அருந்தவப்புதல்வரான உயர்திரு S. கலியாணசுந்தரையர் தம் தந்தையார் நினைவு என்றும் உலகில் ஓங்கி வளர்தற்குரிய வகையை நாடிச் செய்த அருஞ் செயலின் பயனாக இந்நூல்நிலையம் தோன்றியது.

அவர், தம் தந்தையார் அரிதிற் சேகரித்துப் பொன்னே போலப் போற்றிவந்த சுவடிகளை எக்காலத்தும் அழியாமல் காக்கவும், அவர்கள் தொடங்கிய தமிழாராய்ச்சித் தொண்டு நாட்டில் இடையறாமல் நிகழ்ந்து வளர்ந்து வரவும், புதிய நூல்களைப் பதிப்பித்து நாளடைவில் தம் தந்தையாரியற்றிய பணியின் பயன் அகில உலகமெங்கும் பரவவும், இச்சுவடிகளைக் கொண்டு தம் தந்தையாரின் பெயரால் ஒரு நூல் நிலையத்தை நிறுவ விரும்பி முயன்று அதில் வெற்றியும் பெற்றார்.

தாம் தம்தந்தைக்குச் செய்யும் உதவி, மேலே குறித்த வண்ணம், ஸ்ரீ ஐயரவர்கள் பெயரால் ஒரு நூல்நிலையத்தை நிறுவி, அதனில் அவர்களுக்குச் சொந்தமான ஓலைச் சுவடிகளை வைத்து, அவற்றைக் கொண்டும், ஐயரவர்கள் எழுதி வைத்துள்ள அரிய குறிப்புக்களைக் கொண்டும் புதியனவாகப் பழந்தமிழ் நூல்கள் வெளிவர முயல்வதே ஆகும் என்றுஉறுதிகொண்டு, அதற்கு ஏற்ற இடம், அடையாற்றுக் கலாக்ஷேத்ரமாகும் என்றும் உணர்ந்து, அதன் தலைவரான ஸ்ரீருக்மிணிதேவியாரிடம்அச்சுவடிகளை அவர்ஒப்படைத்தார்.

அவற்றைக் கொண்டு, 5-7-1943 அன்று அடையாறு பிரமஞான சபையின் தலைமை அலுவலகக் கட்டடத்தில், அடையாறு நூல்நிலையத்தின் அருகில், 'மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே சாமிநாதையர் நூல்நிலையம்' என்ற பெயருடன் ஸ்ரீமதி ருக்மிணிதேவியார் அவர்களால் இந் நிலையம் நிறுவப் பெற்றது திரு. கலியாணசுந்தரையர் அவர்களே இந்நிலையத்தின் நிர்வாகியாகவும் பணி ஏற்றார்.

ஸ்ரீமதி ருக்மிணிதேவியார் அவர்கள் இந்நூல் நிலையத் தொடக்கத்தைப் பற்றி வேறோரிடத்தில் எழுதியுள்ளதை (மொழிபெயர்ப்பில்) இங்கே தருகின்றோம்:

" மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா சென்னைத் திருவான்மியூரில் 1967 ஏப்ரல் 22-ல் நிகழவிருக்கும் மங்களகரமான செய்தியைத் தங்களுக்குத் தெரிவிக்கின்றேன். இந்த நூல்நிலையம், மகாமகோபாத்யாய டாக்டர். உ. வே. சாமிநாதையர் என்னும் மகாபுருஷரின் உழைப்பு மிக்கதும், சமர்ப்பணம் செய்யப்பெற்றதும், ஆயுள் முழுமையும் நடைபெற்றதுமான தொண்டின் பயனே என்பதை யாவரும் அறிவர். அவர் இவ்வுலக வாழ்வை நீத்தபோது தமிழ்ப் பண்பாட்டுலகம் ஒரு மகாத்மாவை இழந்துவிட்டதென்பதையும், அவர் மறைவால் நம்மிடையே மிகப்பெரிய இடைவெளி நேர்ந்துவிட்டதென்பதையும் யாவரும் அறிவர். அவர் காலமானபோது, நான் வெளியிட்டு வந்த 'யங் ஸிடிஸன்' என்ற பத்திரிகையில் பின்வருமாறு எழுதினேன் :

"மகாகவிஞர் ரவீந்த்ர நாத தாகூர் மறைந்த சுவட்டைப் பின்தொடர்ந்து மகாமகோபாத்யாய டாக்டர் சாமிநாதையர் மறைவும் இந்தியாவிலிருந்து மற்ரெரு பிரபாவ சக்தியை எடுத்துச் சென்றுவிட்டது என்னலாம். தோற்றத்திற்குத் தென்னிந்தியாவைமட்டும்பாதிப்பதுபோல் தோன்றினலும், இஃது இந்தியா முழுமைக்குமே பெரிய துரதிருஷ்டமாகும். மகாமகோபாத்யாயர் ஆங்கிலத்திலும் எழுதி, உலகத்தைச் சுற்றிப் பிரயாணமும் செய்திருப்பாராஞல், உலகப் பண்பாட்டின் புனருத்தாரணத்துக்கு அவர் மிகப்பெரிய சகாயம் செய்தவராகக் கருதப்பட்டிருப்பார். ஆனுல் அவர் தமிழ் மொழிக்குச் செய்துள்ள தொண்டு தமிழ் மூலமாகவே ஆஞலும், அவருடைய மகத்தான பெருமைக்கு அது எவ்வித வேற்றுமையையும் செய்யாது.

"அவருடைய ஒளிச்சிறப்பு, கல்விமேன்மை ஆகியவற்ருல் கலாக்ஷேத்ரம் போன்ற ஸ்தாபனம் அடையக்கூடிய பெருமையையும் நன்மையையும் எண்ணி, அவரை அதன் கௌரவ உறுப்பினர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினேன். என் வேண்டுகோளை அன்புடன் அவர் ஏற்றுக்கொண்டாராயினும், அவருடைய முதிய பிராயத்தால் உண்டான உடல் தளர்ச்சியால் எங்கள் பணிகளில் அவர் பங்கு கொள்ள முடியவில்லை. ஆயினும் என்னுடைய தொண்டுகளில் தமக்குள்ள மிகுந்த அன்பையும் ஆதரவையும் தெரிவித்து, அவற்றிற்குத் தம் வாழ்த்துக்களையும் அருளினர். இவற்றிற்காக நான் அவருக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன். சாமிநாதையர் தம் வாழ்க்கையில் எந்தத் தத்துவங்களைக் கடைப்பிடித்தாரோ, அவற்றையே நம் இளைஞர்களும் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து வருவார்களாஞல் அதுவே அப்பெரியாருக்கு நாம் எழுப்பும் சிறந்த நினைவுக் குறியாகும் என்பது என் கருத்து.

"தென்னிந்தியாவின் பழம் பண்பாடு விளங்குவதற்கு அவர் மிகப் பேருதவி அளித்துள்ளார். அதன் மதிப்பு உலகம் முழுமையும் பரவுதற்கு உதவ நாம் வல்லவர்களாகக் கூடும் என்று நம்புகிறேன். வாழ்க்கையின் அழகையும் தத்துவத்தையும் தமிழைவிட அழகாகவும் உண்மையாகவும்

தெரிவிக்கவல்ல மொழி மற்றென்று கிடையாது. பெருமையுள்ள எந்தப் பண்பாடும் ஒருமையையே வலியுறுத்துவதாகும். இந்தியாவின் பிற பகுதிகளுக்குரிய பண்பாடுகள், கவிதைகள், இவற்றின் இடையே தமிழ்மொழி தனக்குரிய இடத்தை ஏற்கும்போது, அதன் இணைப்பால் இந்தியப் பண்பாட்டின் உயர்வும் தூய்மையும் எங்கும் விளங்குவது திண்ணம் என்பது என் துணிவு.

மேலே கண்டபடி நான் எழுதியவை ஸ்ரீ ஐயரவர்களைப் பற்றி உண்மையாக நான் கொண்ட கருத்தைப் புலப்படுத்தும். அதைப் பார்த்தவுடன் டாக்டர் சாமிநாதையரவர்களுடைய குமாரரான திரு. கலியாணசுந்தரையர் என்னைக் காண வந்தார். அவர் சிறிதும் தன்னலமற்றவர்; தம் தந்தையாரிடம் நிறைந்த பக்தியும் அன்பும் கொண்டவர். அவர் எள்ளளவும் வியாபார உணர்ச்சி இல்லாமல், தம் தந்தையாருக்குச் சொந்தமான சுவடிகளை நான் போற்றி வளர்க்க வேண்டி என்னிடம் ஒப்படைத்தார். என்னிடம் சிறிதும் மூலதனம் இல்லாத அன்றைய நிலையில், இதனை இறைவன் அளித்த கொடை என்று கருதி டாக்டர் சாமிநாதையர் அவர்களுடைய விருப்பங்களை என்னால் ஆனவகையில் நிறைவேற்ற முயலவேண்டும் என்ற ஆசை காரணமாக இப்பொறுப்பை ஏற்றுக்கொண்டேன். இதுவே இந்நூல் நிலையத்தோற்றத்தின் சுருக்கமான வரலாறு."

இவ்வாறு தொடங்கிய நூல்நிலையம் கடந்த இருபத்து நான்கு ஆண்டுகளாகத் தன் ஆற்றலுக்கு ஏற்ற முறையில் தமிழ்ப் பணி புரிந்து வருகிறது. இன்று நூல்நிலையத்திலுள்ள ஓலைச் சுவடிகளின் எண்ணிக்கை 1305. அவற்றில் எழுதப் பெற்றுள்ள நூல்கள் ஏறக்குறைய 2500 இவற்றை ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்ருக விவரித்த விளக்க அட்டவணை ஒன்று, (Discriptive catalogue) நான்கு தொகுதிகளாக நூல்நிலையத்தால் அச்சிடப் பெற்றுள்ளது. இச்சுவடிகள் கொண்டுள்ள நுல்களின் வகைகளை ஷெ அட்டவணை, நிகண்டுகள், இலக்கணம், சங்க இலக்கியம், காப்பியங்கள், இதிகாசம், புராணம், தலபுராணம், பிரபந்தங்கள், மெய்கண்ட சாத்திரங்கள், பிற சைவ சாத்திரங்கள்,

திருமுறைகள், தோத்திரம், வீரசைவம், வேதாந்தம், வைணவம், ஜைனம், இஸ்லாம், கதைகள், சரித்திரம், இசை, நாட்டியமும் நாடகமும், தர்க்கம், கணிதம், வைத்தியம் முதலியனவாக வகுத்து விளக்கும்.

இந்நிலையம் தொடங்கின நாள்முதல் ஸ்ரீஐயரவர்களின் கொள்கைகளையும் விருப்பங்களையும் நன்கு அறிந்த திரு. கலியாணசுந்தரையரவர்கள் நூற்பதிப்பு வேலையை மேற்கொள்ளலாயினர். அவர்கள் தொடங்கிய பணி, இடையருமல் நடந்துவருகின்றது ஏறக்குறைய 9,000 பக்கங்கள் கொண்ட 9பகுதிகளில் கம்பராமாயணம் முழுதும் விரிவுரைகளுடனும், அதிகப் பாடல்கள், பாடபேதங்கள் முதலியவற்றுடனும் இங்கிருந்து வெளியாகியுள்ளது. இன்னும் 11இலக்கிய நூல்கள், 2இலக்கண நூல்கள், 3சமய நூல்கள், 5 கலை நூல்கள், 1 நீதிநூல், 3 வசன நூல்கள் ஆகியனவும் இந்நிலையத்தினின்றும் வெளிவந்துள்ளன. இவற்றுள் பல முதன்முதலாக அச்சில் உலகுக்கு அளிக்கப்பெறுவன.

இறைவனருளால், இந்நிலையம் கலாக்ஷேத்ரத்துக்கு அருகிலும் பாம்பன் குமாகுருதாச சுவாமிகள் மடத்துக்கு வடக்கிலும், ரூ 1,50,000 செலவில் அமைந்துள்ள சொந்தக் கட்டடத்தில் (22-4-67 அன்று) குடியேறும் வாய்ப்பினைப் பெற்றுள்ளது. இதன் செலவுக்குப் பெரும்பகுதி உதவியுள்ள மத்திய அரசியலார், மாநில அரசியலார், பொதுமக்கள் ஆகியோர்க்கு இந்நிலையம் மனமார்ந்த நன்றி செலுத்துகின்றது.

முடிவு : ஆயிரம் ஆண்டுகட்கு ஒருமுறை தமிழுக்கு நேரும் குறைகளை நீக்கி அதற்கு ஒளி ஊட்டும் அவதார புருஷர்களுள் ஒருவரான நம் ஸ்ரீ மகாமகோபாத்யாய ஐயரவர்களின் புகழுடம்பாக விளங்கும் இந்நூல் நிலையம் இத்தெய்வத் திருவான்மியூரில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மருந்தீசரின் திருவருளால் நீடூழி வாழ்ந்து ஸ்ரீ ஐயரவர்கள் துவக்கிய அரும்பணியை எஞ்ஞான்றும் செய்துகொண்டே விளங்க வேண்டுமென்று அவனருளாலே அவனடிகளை வணங்கி வேண்டுகின்றோம்.

பார்வையிட்ட பெரியோர் சிலரின் கருத்துக்கள்

தமிழ்த் தாத்தா எனப் பாராட்டப்பெறும் டாக்டர் உ.வே சாமிநாதஐயரவர்கள் திருப்பெயரால் அமைந்திருக்கும் நூல்நிலையத்திலே, ஐயரவர்களது இமயமலை அனைய பேருழைப்பைக் காணப் பெரு மகிழ்வு கொள்கின்றோம்.

ஐயரவர்கள் தமது காலத்தில் அரிதின் முயன்று தேடிவைத்திருக்கும் ஏட்டுச் சுவடிகள், எழுதிய குறிப்புரைகள், பதிப்பித்த நூல்கள், வெளிவர வேண்டியவை முதலிய எல்லாவற்றையும் திரு. விசுவநாத ஐயரவர்களும் அவர்களோடு பணி செய்கின்றவர்களும் திறம்பட வைத்திருப்பது மிகவும் பாராட்டற்குரியது. திரு. விசுவநாத ஐயரவர்களது பேரார்வம் மகிழ்ச்சி ஊட்டுகின்றது.

ஐயரவர்களது நல்ல கனவுகளெல்லாம் திருவருளால் நனவாகுமாக என ஆசீர்வதிக்கின்றோம்.

மதுரை ஆதீனம், சோமசுந்தர தேசிகர்
18—7—56

-O-

ஐயர் அவர்களின் நூல்நிலையத்தை இன்று கண்டு களித்தேன். இந்த நிலையம் ஒரு தமிழ்ச் களஞ்சியம் இவ்விடமுள்ள ஏட்டுப் பிரதிகளைப் போற்றி வைக்கவேண்டியது தமிழ்மக்களின் கடமை. நிலையத்தில் அன்போடும் பக்தியுடனும் தொண்டு செய்பவர்களைப் பாராட்டுகிறேன்.

20—12—50 ரா. க. சண்முகம் செட்டியார்.

-O-

மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் அரும்பாடுபட்டுச் சேமித்து வைத்திருந்த தமிழ்ச் சுவடிகளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஸ்ரீமதி ருக்முணி தேவி அவர்கள் ஏற்றுக்கொண்டது மிகவும் பாராட்டுதற்குரியது. இதுவரையில் அச்சிடப்படாத சுவடிகளை அச்சுக்குக் கொண்டுவருவது தமிழ்மக்களது கடமை. ஐயரவர்களது நினைவை நிலைபெறச் செய்வதற்கு இப்பணி ஒரு சிறந்த வழியாகும். தமிழ் நாட்டிலுள்ள பொருட்செல்வர்களும் கலைச்செல்வர்களும் இப்பணிக்கு வேண்டிய ஆதரவு அளிக்கவேண்டும் என்பது தமிழன்பர்களின் பிரார்த்தனை.

சு. நடேசம் பிள்ளை,
25—12—51 யாழ்ப்பாணம் பரமேசுவர் கல்லூரி அதிபர்.

-O-

ஐயரவர்கள் தேடிவைத்த பொக்கிஷத்தை அழியாது காத்து வருவது பற்றி இந்நிலையத்தை எல்லோரும் ஆதரிக்கவேண்டியது கடமை. இங்குள்ள மதிப்பற்ற ஏடுகள் புத்தக ரூபமாக வெளி வருமென எதிர்பார்க்கிறேன்.

7—8—52 சி. சுப்பிரமணியம்

-O-

திரு விசுவநாதய்யர், எனது வாழ்நாட்களில் இன்றைய நாளை மிகப் புனிதமாக, மறக்க முடியாததாகச் செய்துவிட்டார். வலிய வந்து, வருந்தி அழைத்து, மஹாமஹோபாத்யாய ஐயரின் உழைப்பை - தமிழுக்கு அவர் செய்த உதவியை காட்சியாகக் காட்டினர். அறிவுரையாகவும் - பாடபோதனையாகவும் சிலவற்றை எனக்குக் கூறினர். ஐயரவர்களின் நூல்கள்தான் என்னை - தொழிலாளியாகிய-என்னை-தமிழ் அறிவுடையவனாகச் செய்தன ஆனால், ஐயரின் உழைப்பை, அழியவிருந்த நூற்களுக்கு அமரத்வம் கொடுத்த அருட்செயலை இன்று உணர்ந்ததுபோல் முன் எப்போதும் உணர்ந்ததில்லை. திரு. விசுவநாதய்யருக்கு எனது நன்றி

15—7—55 ம. பொ. சிவஞானம்

Mahamahopadhyaya, Dakshinatya Kalanidhi,

Dravida Vidhyabhushanam

Dr. U. V. SWAMINATHAIYAR, D.Litt.

HIS LIFE AND CONTRIBUTIONS TO TAMIL LEARNING AND CULTURE

In the long history of the Tamil language and literature Destiny had a big part to play both in promoting its growth and enriching it. To mention two instances, about 1800 years ago, the Tamil country had lost all traces of its treatise on Sociology and Culture called *Porul-Adhikaram*—the third chapter of the wide known Grammar '*Tolkappiyam*' of about the 5th Century B.C., as at that time, the scholars of the land had to abandon it owing to a severe drought. The Pandya King and his Court felt grieved over the loss and prayed to God to help them. He, taking pity on their plight, appeared in the garb of a grammarian and supplied them their lost grammarwith a new text. The text thus supplied is called *Irayanar Akapporul* or a grammar on Erotic-Poetry by Irayanar-the God.

On a second occasion—one thousand years after the above incident—the Tamil land was deprived of its spiritual hymns called Tevarams and the then King—a Chola this time, recovered a good portion of it by Divine grace at the shrine of Lord Nataraja at Chidambaram, where it had lain deep in the earth.

For a third occasion—after nearly another period of 1000 years, it was the misfortune of the land to have lost all traces of its great classics called Sangam Works and Major Kavyas. It was given to Tamil Scholar-Pandit Swaminathaiyar to dig out these lost treasures and to give them to the world in highly critical and scholarly editions.

The story of his discoveries is a romance and a marvel of surpassing interest. Before going to this chapter of his endeavours, let us try to probe into his early life and his equipment for this God-given job.

Swaminathaiyar was born on 19-2-1855 in a family belonging to a village called Uthama-Dana-Puram (village of noble gift) in the Tanjore District. His father was a musician of rare talents and he was also fairly well-read in the Puranas and Ithikasas of the land. Though born in a family of musicians and Sanskrit Culture, young Swaminathaiyar had a bias towards Tamil studies and his kind and obliging father not only allowed the boy to have his umo way but also practically helped him by taking him to Tamil scholars nearby.

During that time one, Maha Vidwan Meenakshisundaram Pillai (1815–1876) was adorning the Saiva Monastery at Tiruvavaduthurai as its Atheena-Vidwan (Court-poet), He was hailed throughout the length and breadth of the Tamil land as the greatest scholar-poet of the time. He had sung 22 Sthala-puranas, and 51 minor works called Prabhandhas in addition to innumerable occasional poems called Tani-p-padals. He was also a great and loving teacher. Swaminathaiyar attached himself to this great scholar in April 1871 and stayed with him for 6 fruitful years within which period he had mastered all the extant Tamil religious, grammatical and literary works. Mr. Swaminathaiyar was quickly recognised as a great and well-read scholar in the select world of Tamil scholarship. In 1880 when he was only 25 years of age, he was offered a Tamil Pandit's post in Government Arts College at Kumbakonam. He served here for 13 years when he took up the Tamil Pandit's post at Presidency College, Madras. It was from this College that he retired in 1919. With his erudition and Capacity for good teaching he could have passed for a great teacher of Tamil and with his capacity for composing good poetry, as a good poet of eminence. But his fame did not rest on this; he was destined to play a decisive part in the history of Tamil literature and culture by his discoveries and editions. This work of recovery and discovery was a real miracle and it gave him a unique sense of fulfilment.

His Achievements

The miracle happened thus. Soon after he joined the Govt. College at Kumbakonam, Sri Salem Ramaswami Mudaliar, the District Munsif of the place, gave Sri Swaminathaiyar a manuscript of *Jivaka Chintamani*—a great Jain Tamil classic of about the 9th Century A.D, with its learned commentary by the famous Nachinarkiniyar. The commentary was full of quotations from

works called Sangam classics of which neither Swaminthaiyar nor his learned teacher Mahavidwan Pillai or any one else of the age had heard. The quotations were so rich in content and style and language, that the eager and young mind of the scholar longed to get at these sources at any cost. The story of his travail in pursuit of old, moth-eaten, illegible manuscripts has been told by him in his autobiography and his other writings on the subject. He says in his *Autobiography* (p. 838) :—

"I had to compare the text and notes of the work as set out in the few manuscripts secured by me. I found the letters and words sometimes deficient and sometimes in excess, changed and altered and otherwise confused. I had to work at this work of collation and textual reconstruction strenously sifting the actual annotations from the commentaries, fixing the beginnings and endings of the quotations, equating the annotations with the texts, to eliminate the mistakes that had crept in by the negligence or ignorance of the copyists. The toil and trouble that I underwent and the attempts I made were countless. Even so, I could not always get at the correct forms of quotations from works on Music and dance—as the originals of such works were not available."

On another page (P. 839) he says :—"I wondered on seeing the differences in the texts available to me in the manuscript copies as to whether I could at all arrive at the true and correct form of the text (of the work). Even when I found that a little change in the text by me would make a better reading, I did not dare to touch the manuscript-readings. I had no desire to push my ideas or corrections into the work. The classic I undertook to edit was sacred to me. My whole desire was to remove the dirt that had settled on it and to protect it from further damage. Now and then the suggestions came to me, as "The hand seems to be bent; why not I mend it? The nail needs some little correction: Why should I not correct it ?" But I did not think it proper to do any such thing. To me every little part of it was the residence of divine energy. I knew the difference between removal of dust and mending the figure. My desire was to present to the world ancient literature in its ancient form. With this as my ideal I never took the smallest liberties with the text available to me. I never added from my imagination, nor reduced, nor in any way altered the form available to me either

to satisfy my whims or those of the world. I never could muster strength to thrust my personality into anything that belonged to the past."

This was his method, this his hard-won technique of editing, comparable only with the masterly techniques of editing which evolved in the West, for the recovery of Old English, Middle English, Latine and Greek texts.

With this ideal before him he worked unceasingly day and night till his last breath (28-4-1942) and was able to present to the world excellent editions of many an ancient classic in Tamil and to give the language a new glow and fame. He edited and published the Sangam works with their ancient commentaries, and other equally important works as Epics and Prabhandhas etc. From 1887 when his famous edition of Jivaka Chintamani came out from his pen, he unceasingly had edited and published 91 works i.e. 6 Sangam works, 5 Major Kavyas, 14 Sthala Puranas, 44 Prabhanda works, 4 Grammatical treatises and 18 Prose volumes.

By his efforts, Tamil regained all its lost treasures and became an important factor in the cultural history of India and of the world. He paved the way for a multitude of research institutions on the subject in the land and in foreign countries and the results of his life-work will always grow more and more and in wider fields as Tamil knowledge spreads throughout the world. His work was as markedly thorough as it was decisive and final in its sphere.

The Library that stands in his name.

The Mahamahopadhyaya Dr. Swaminathiyar Library and Research Institution really started on the day when the great scholar Salem Ramaswami Mudaliar divined the potentialities which lay in the Pandit's brain, mind and heart and presented to him a copy of the cadjan leaf manuscripts of the famous epic Chintamani in the year 1880. Prompted by an insatiable thirst for the discovery of manuscripts of ancient works in Tamil the scholar-pandit completely devoted himself to his self-imposed task and at the time of his death was able to bequeath to the World about 1500 manuscripts on literary works of unique value. He used to pride himself as the possessor of a Library of manuscripts far superior to any other similar one in the land-as the choice-collection was made by himself from the houses of highly learned

scholars and as every manuscript had a special value of its own with its text approved by its learned owner. He used to boast of his collection saying that he had all the literary works which other libraries in the land had while the other libraries did not contain all works which he had, collected." He not only corrected the mistakes that had crept into the manuscripts as a result of the vagaries of the scribes but he deeply studied them, compared them with the other copies of the same kind. He took copies for many of them on paper and had written notes on the results of his studies of them. Many works he has edited with his Introductions, critical notes, Indexes etc, and many he had left behind for his followers to take up.

This valuable treasure was handed as a gift in 1943 (5-7-1943) to Srimati Rukmini Devi of Kalakshetra by the scholar's devoted son Sri Kalyanasundara Aiyar whose main object was to see that his father's rare and valuable collections are kept intact and its individuality and purity maintained and his father's editing work is continued in the manner in which he did it himself throughout his life.

She with her rare intution and her natural deep sympathy for anything great and pure could easily see the value of these manuscripts and their potentialities in the future and decided to help Sri Kalyanasundara Aiyar in his noble aim and accepted the gift. Accordingly the manuscript library bearing the name of the great scholar was opened at Adyar on 5—7—1943 and Sri S. Kalyanasundara Aiyar was appointed its Honorary Curator and Chief Editor. He was assisted by a skeleton staff of two Pandits and a part-time attender.

The Library was at first located in a wing of Adyar Library (attached to the Theosophical Society). An advisory body to help the ChiefEditor on the Academic side, another to help the management on its administrative side were formed. From such small beginnings the Library took shape as a consulting and research centre for Tamil scholars and today it caters to the needs of the Tamil literary world by offering its manuscripts for consultations and by bringing out its own publications. The Library is now registered under the Societies Registration Act XXI of 1860 and managed by a General body consisting of 26 members and an Executive Committee consisting of 7 members. It receives -

recurring grant of about Rs. 9,000/. per annum and occasional special grants from the Central and State Governments.

It has now manuscripts on several branches of study as Literature, Religions, Arts, Medicines, etc., and holds a great promise for its future.

By God's grace, it has now been endowed with its own building at Tiruvanmiyur at a cost of 1.50 laks. The Management of the Library is very thankful to both the Central and State Governments for their munificent grants and to the generous public, for getting the building were possible.

As most people know, this Library represents the laborious and dedicated life-work of that great savant, the late Mahamahopadhyaya Dr. U. V. Swaminathaiyar. When he passed away, the world of Tamil culture lost a great soul and a great gap was left in our midst. At the time of his death, Srimati Rukmini Devi wrote the following note in the young Citizen which she edited at that time.

"The passing of Mahamahopadhyaya Dr. Swaminathaiyar has removed from India another great influenee so closely following the passing away of Poet Rabindranath Tagore. It is a great misfortune for our country though perhaps only South India would know the actual extent of the loss. If the Mahamahopadhyaya had written in English and had travelled around the world he certainly would have been recognised as one of the greatest contributors to the cultural renaissance of the world. But whether his contribution to the Tamil language and learning is in English or not, it makes no difference to the greatness of his personality.

"Realising how great and valuable the charm of his personality and the value of his vast learning would be to such a centre as Kalakshetra I invited him to be one of its honorary members. He was pleased to accept my invitation, but declining physical strength prevented him from taking an active part in our work. But, he unhesitatingly gave his support and blessings to my work for which I am deeply grateful to him. I think that the best memorial we can raise for him is for the younger generation to honour, in their personal life, the great principles for which Swaminathaiyar stood.

"I hope that we shall be able gradually to develop the gift that he has given to South Indian Culture so that it may have

world-wide value. There is no language which has expressed more truly and beautifully the great poetry and philosophy of life than Tamil. All great cultures form a unity and I know that the quality of Tamil is something so unique that it is bound to bring about a truer Indian spirit when it takes its rightful place with the culture and poetry of other parts of India."

This explains how she felt about him. This note brought to see her, Sri Kalyanasundara Aiyar, the selfless and devoted son of Dr. Swaminatha Aiyar, with no thought of commercial interest, but with love and devotion to his father. He handed over this Library to her to cherish and develop. Though She had no funds at her disposal she accepted this as " God given gift " " because of her desire to do everything She could, to fulfil the wishes of Dr. Swaminatha Aiyar.

This very briefly is the History of the Beginnings of this Library.

May God bless this unique Memorial of a Great Soul.

Srinivasa Gandhi Nilayam (Srigam Printers), Madras-18

SOME OPINIONS (cond.)

India lives in her Vedas, Shastras Puranas - in her scriptures. Her culture is enshrined and her glory immortalised in the treasure houses of wisdom such as the Dr. V. Swaminatha Iyer Library. It is heartening to see the deep and "maternal" interest that Dr. Tirumurti and the Library staff take in the preservation of the invaluable manuscripts. The Library has the blessings of Saints and sages and of the Mahamahopadhyaya who still lives in the Library.

Ananda Kutir P. O.
Rishikes,
Camp. Madras
3-10-50

(Sd.) Sivananda
(H. H. H. Swami Sivananda)

It gave me great pleasure and satisfaction to visit the Library dedicated to the great name and work of Shri V. Swaminatha Ayyar who has done so much, against heavy odds, to research the great Tamil literature and leave behind a varied collection of manuscripts and books besides his own valuable writings, for the helping of scholars that follow him. May the Library serve the noble purpose for which it has been erected.

February 20, 1955.

(Sd.) SRI PRAKASA,
Governor of Madras.

I do not know whom to admire more-the remarkable scholor that is gone leaving a proud people behind him or the loyal and devoted and industrious staff and admierers that maintain this difficult but most worthy mass of mementoes.

(Sd.) C. Rajagopalachari,
February 22, 1955.

I was very happy to see the collection of manuscripts and the methodical manner in which work is carried on here. I would only suggest on all humility that for the benefit of non-Tamalian some of the leading publications should be printed in Devanagiri script with good translations.

15—6—1955

(Sd.)..................

நூல் நிலைய வெளியீடுகள்

எண்	பெயர்	பக்கம்	விலை	
I.	இலக்கியம்		ரூ.	பை.
	கம்பராமாயணம் : (பதவுரை, விளக்கங்கள் முதலியவற்றுடன்)			
	பாலகாண்டம் (இரண்டாம் பதிப்பு)	...	(அச்சில்)	
	,, அயோத்யா காண்டம் ஷ	...	(அச்சில்)	
	,, ஆரணிய காண்டம்	1157	12	00
	,, கிட்கிந்தா காண்டம்	1056	12	00
	,, சுந்தர காண்டம்	1084	12	00
	,, யுத்த காண்டம் பகுதி I	1232	12	00
	,, ,, பகுதி II	1200	12	00
	,, ,, பகுதி III	1195	12	00
	,, ,, பகுதி IV	1117	12	00
	சூளாமணி—குறிப்புரையுடன்	938	12	00
	தக்கயாகப்பரணி	568	6	50
	பெருங்கதை		(அச்சில்)	
	மூவருலா—பழைய உரையுடன்	363	5	00
	கப்பற்கோவை—குறிப்புரையுடன்	246	3	00
	நளவெண்பா—விளக்க உரையுடன்	376	5	00
	திருக்குறள்—ஒரு பழைய உரையுடன்	460	4	00
	திருக்குற்றாலநாதருலா	156	2	25
	அகிலாண்டநாயகிமாலை—குறிப்புரையுடன்	67	0	50
	சேக்கிழார் பிள்ளைத்தமிழ்	132	1	50
	தமிழ்ப்பா மஞ்சரி—ஸ்ரீ ஐயரவர்களின் சாகித்தியங்கள் —பகுதி I	90	1	50
	,, —பகுதி II	172	2	50
II.	இலக்கணம்			
	யாப்பருங்கலக் காரிகை உரையுடன்		(அச்சில்)	
	நவநீதப் பாட்டியல் மூலமும் உரையும்	108	2	00

எண்	பெயர்	பக்கம்	விலை	
III.	சமயம்		ரூ.	பை.
	திருவாசக வியாக்கியானம்—அநுபூதி உரை	1014	13	00
	கமலாலயச் சிறப்பு : குறிப்புரையுடன்	457	5	00
	திரு அம்பர்ப் புராணம்—குறிப்புரையுடன்	271	5	00
IV.	கலைகள்			
	பரதசேனாபதீயம்—(நாட்டியம்)	72	1	25
	அபிநயதர்ப்பணம்—(படங்களுடன்)	164	5	00
	மகாபரதசூடாமணி—பகுதி I	417	10	00
	,, பகுதி II—இசை	226	5	62
	திருக்குற்றாலக் குறவஞ்சி—(நாடகம்)	32	1	25
	கும்பேசர் குறவஞ்சி	106	1	50
V.	நீதி			
	மநுவிஞ்ஞானேசுவரீயம்	274	4	00
VI.	வசனம்			
	மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரச் சுருக்கம்—பகுதி I	190	3	00
	—பகுதி II	127	2	25
	ஐயரவர்களின் வாழ்க்கை வரலாறு (சுருக்கம்)	...	0	10
VII.	சுவடிகளைப் பற்றியவை			
	சுவடிகளின் நாமாவளி	88	0	37
	சுவடிகளின் விளக்கம் (Descriptive Catalogues) —பகுதி I	402	10	00
	—பகுதி II	668	10	00
	—பகுதி III	476	10	00
	—பகுதி IV	500	10	00